

குருவே துணை
வாழ்க வையகம் வாழ்க வளமுடன்
வேதாத்திரிய பார்வையில்
தாயுமானவரின் ஆனந்தமானபரம்...
அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்.
• டிசைன் ~ தவம் ஆர்ட்ஸ் •

# வேதாத்திரியப் பார்வையில்
# தாயுமானவரின் ஆனந்தமானபரம்

அருள்நிதி. மன்னார்குடி பானுகுமார்

இதனுள்ளே. . . . .


1. ஆனந்தமே பரம்பொருள்
2. அறுகுண சீரமைப்பின் அவசியம்
3. மெய்யறிவை நாடி மனித குலம் செல்ல வேண்டும்!
4. துறவு முத்திரையில் மோசம்
5. எல்லாம் மெய்ப்பொருளே
6. இறையுணர்வு பெற அகத்தவமும் அகத்தாய்வும் வேண்டும்.
7. அறிவின் அகநோக்குப் பயணம் வேண்டும்.
8. வினைத்தூய்மை அனைவர்க்கும் இன்பம் நல்கும்
9. குணக்கேடர் அவனிமிசை உண்டோ சொலாய்?
10. குருவின் சேர்க்கை

“அன்பர் பணி செய்ய எனை ஆள்ஆக்கி விட்டுவிட்டால்

இன்பநிலை தானேவந்து எய்தும் பராபரமே”

இதுவே தாயுமானவரின் அடிப்படை நோக்கமாக, இலட்சியமாக தாரக மந்திரமாக அமைந்துள்ளது.

“யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்” என்றும்” வாழ்க வையகம் வாழ்க வளமுடன்” என்றும் தாம் துய்த்த இன்பத்தைப் பிறரும் பெறல் வேண்டுமென முன்னோர்கள் நினைத்தனர்.

தாயுமானவர் தன்னைப் பற்றிக் கவலைப்படாது தான் பெறுகின்ற இன்பம் பற்றி நினைத்தார்.

“உலக உயிர்கள் அனைத்தும் இன்பமாக வாழ்தல் வேண்டும். அதைத் தவிர வேறொன்றும் அறியேன்” எனப் பேசுகிறார். தன்னலமற்ற பொது நலத் தன்மையினை இவ்வரிகள் காட்டுகின்றன.

# ஆனந்தமே பரம்பொருள்

ஆனந்தமே பரம்பொருள். அது யாருக்கும் தனி உரிமையாகாது. அண்டங்கள் அனைத்தும் ஆனந்தத்தில் தோன்றி ஆனந்தத்தில் நிலைத்திருந்து ஆனந்தத்திலேயே ஒடுங்குகின்றன.

"ஆனந்தோ ப்ரஉற்மேதி வ்யஜானாத்!

ஆனந்தாத்யேவ கல்விமானி பதானி ஜாயந்தே!

ஆனந்தேன ஜாதானி ஜீவந்தி!

ஆனந்தம் ப்ரயன்த்யபிஸம்விசந்தி!

தைத்தியோசநிஷதம் (3 – 6)

ஆனந்தம் பிரம்மம் என்று சாதகன் ஞானத் தெளிவடைந்தான். ஆனந்தத்திலிருந்தே நிச்சயமாக உயிர்கள் தோன்றியுள்ளன.

பிறந்தவை எல்லாம் ஆனந்தத்திலேயே வாழ்ந்திருக்கின்றன. இறுதியில் ஆனந்தத்திலேயே லயமடைகின்றன.

ஆனந்தத்தை அறியாதார் யார்?

ஆனந்தமில்லாது யார் உயிர் வாழ்ந்திருக்க முடியும்?

ஆனந்தத்தில் ஒன்றுபட்டிருப்பவர் பரமனை அடைந்தவர் ஆகின்றனர்.

பேரின்பமாக விளங்கும் மேலான பொருளான சுத்தவெளியை ஆனந்தமான பரம் என்று அழைக்கிறார் தாயுமானவர்.

இறைநிலை ஆனந்தமயமானது என்பதை பேரின்ப ஊற்று என்பார் வேதாத்திரி மகரிசி.

ஆனந்தமான பரம் என்ற தலைப்பிலே தாயுமானவர் 10 பாடல்களை 160 வரிகளில் ஆனந்தமாகப் பாடியுள்ளார். ஒவ்வொரு பாடலின் இறுதியிலும்

"அண்டபகி ரண்டமும் அடங்க ஒரு நிறைவாகி

ஆனந்த மானபரமே" (தா.பா.67)

என்று பாடி முடிக்கிறார் தாயுமானவர்.

அண்டங்களும் பேரண்டங்களும் உன்னுள் அடங்குமாறு, ஒப்பற்ற நிறைவாய், பேரின்பமயமாய் விளங்கும் மேலான பொருளே என்று இறைநிலையை தாயுமானவர் போற்றுகிறார். அருட்தந்தை வேதாத்திரி மகரிசியோ.....

"பேரண்டப் பெருவெளியை நினைக்குந் தோறும்

பெருகிவரும் இன்பத்தை யான் என் சொல்வேன்" (ஞா.க.1419)

என்று பல இடங்களில் "பரம்பொருள் ஆனந்தமயமானது" என்று போற்றுகிறார் மகரிசி.

"இன்ப ஊற்றாய் நிறைந்த இறைவா - எங்கும்
இன்ப ஊற்றாய்ப் பெருகும் இறைவா!
அன்பு ஊற்றாய்ப் பெருகி அனைத்துயிர்க்குள்ளும் அறிவாய்
இன்ப ஊற்றாய் நிறைந்த இறைவா" (ஞா.க.பா.1648-1)

உடல், உயிர் மனம் மூன்றும் ஒன்றிணைகின்றபோது அறிவானது விரிவடைந்து, தன்னிலே எல்லாவற்றையும் எல்லாவற்றிலும் தன்னையும் காணக்கூடிய உணர்வுநிலை பேரின்ப நிலை ஆகும்.

இறைநிலையானது அறிவாக தோற்றங்கள் அனைத்திலும் ஊடுருவி நிறைந்து. ஒன்றோடு ஒன்று இணைத்துக் கொண்டுள்ளது.

அந்த அறிவானது அன்பை ஊற்றுப்போல சுரந்து கொண்டும் பெருகிக் கொண்டும் உள்ளது. பரம் ஆனந்தமாக இன்ப ஊற்றாக உள்ளது என்கிறார் அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி.

# அறுகுண சீரமைப்பின் அவசியம்

மனிதனிடம் தீய குணங்கள் எனும் மனோ நிலைகள் எழுச்சி பெறும் போது தீய செயல்களைச் செய்து விடுவான். அதனால் பொருள் அழிவும், மகிழ்ச்சி இழப்பும் விளையும்.

தேவையும், பழக்கமும் சூழ்நிலைகளும் உணர்ச்சிகளைத் தூண்டி விடுகின்றன. அனுபவ நினைவுகளும், சிந்தனையும், தெளிவும் அளிக்கின்ற நல்ல முடிவைக் கொண்டு உணர்ச்சிகளை ஒழுங்குபடுத்திக் கொள்ளும் திறனே "அறிவு" எனப்படும்.

உணர்ச்சிகளால் அறிவு மயங்கித் தனது நிலை மறந்து செயலாற்றினால் அதனை "மயக்கம்" அல்லது "மாயை" என்று கூறுகிறோம். அறிவு நிலை குலைந்த மயக்கத்தில் தான் தீய செயல்கள் விளைகின்றன.

தன்னிடத்தில் எத்தனை எத்தனை தீய குணங்கள் இருக்கின்றன என்று வரிசைப்படுத்தி வருந்துகிறார் தாயுமானவர்.

மனிதனிடம் உள்ள கெட்ட குணங்களை தன்னிடம் உள்ளதாக சொல்லி, அதனை சீரமைக்க வேண்டும் என்று மானுடத்திற்கு சொல்லுகிறார் தாயுமானவர்.

கொல்லாமை எத்தனை குணக்கேட்டை நீக்கும்

குணம் ஒன்றும் ஒன்றிலேன்பால்

கோரம் எத்தனை பட்ச பாதம் எத்தனை, வன்

குணங்கள் எத் தனைகொடிய பாழ்ங்

கல்லாமை எத்தனை அகந்தை எத்தனை மனக்

கள்ளம் எத்தனை உள்ளசற்

காரியம் சொல்லிடினும் அறியாமை எத்தனை
கதிக்கு என்று அமைத்தஅருளில்

செல்லாமை எத்தனை, விர்தா கோஷ்டி என்னிலோ
செல்வது எத்தனை? முயற்சி
சிந்தை எத்தனை, சலனம் இந்த்ர ஜாலம் போன்ற
தேகத்தில் வாஞ்சை முதலாய்

அல்லாமை எத்தனை அமைத்தனை உனக்கு அடிமை
ஆனேன், இவைக்கும் ஆளோ?

அண்டபகி ரண்டமும் அடங்க ஒரு நிறைவாகி
ஆனந்த மானபரமே!" (தா.பா.67)

- கொல்லாமை என்னும் ஒரு நல்ல குணம், எத்தனை குணக்கேடுகளைப் போக்கவல்லது? இருந்தும், அக்குணத்தினைப் பொருந்தி நில்லாத என்னிடத்தில், காணப்படும் கொடுமைச் செயல்கள் எத்தனை?
- ஒருபக்கம் சாரும் தன்மை எத்தனை?
- கொடிய குணங்கள் எத்தனை?
- கொடுமை நிறைந்த பாழாய்ப் போன அறியாமை எத்தனை?
- செருக்கு எத்தனை?
- மனத்தளவில் ஒளிக்கும் கள்ளத்தனம் எத்தனை?

- இயல்பாய் உள்ள புண்ணியச் செயல்கள் குறித்து எடுத்துரைப்பினும் அவற்றுள்ளும் காணப்படும் அறியாமை எத்தனை?
- வீடுபேற்றுக்கு எனச் சொல்லப்பட்ட நற்செயல்களில் ஈடுபடாமை, வீண்வார்த்தை பேசும் கூட்டத்தாரோடு சேர்ந்து திரிதல், நிலையில்லாத அழியும் தன்மை உடைய உடம்பின் மீது வைத்த விருப்பம் முதலிய பொருந்தா குணங்கள் எத்தனை? எத்தனை?

உனக்கு அடிமையான என்னிடம், இத்தனை தீய குணங்களை வைக்க, அவற்றுக்கும் நான் அடிமையோ? எனக் கேட்கிறார் தாயுமானவர்.

தாயுமானவர் மனிதரிடத்தில் உள்ள கெட்ட குணங்களை பட்டியலிடுகிறார். வேதாத்திரி மகரிஷியோ மனிதனிடம் உள்ள கெட்ட குணங்களை ஆறாகப் பகுத்து, அதனை சீரமைப்பதற்கும் பாதை காட்டுகிறார்.

அறுகுணம் என்பது காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம் என்ற பெயர்களில் வடநூலார் குறிப்பிட்டுள்ள ஆறுவகை மனோ நிலைகள்.

இவை தமிழ் மொழியில் முறையே பேராசை, சினம், கடும்பற்று, முறையற்ற பால்கவர்ச்சி, உயர்வு-தாழ்வு மனப்பான்மை, வஞ்சம் என விளக்கப்படுகின்றன.

இவை எல்லா உயிர்களிடத்தும் அமைந்துள்ளன. தெளிந்த அறிவோடும், விழிப்போடும் இருந்தால் இந்த ஆறு மனோ நிலைகளில் - - - -

- பேராசையை - நிறை மனமாகவும்;
- சினத்தைப் - பொறுமையுடமையாகவும்;
- கடும் பற்றை - ஈகையாகவும்;
- முறையற்ற பால் வேட்கைப் கற்பாகவும்;
- உயர்வு - தாழ்வு மனப்பான்மையை - நேர் நிறையுணர்வாகவும்;
- வஞ்சத்தை - மன்னிப்பாகவும் சீரமைத்துக் கொள்ளலாம்.

தனக்கும் பிறருக்கும், தற்காலத்திலும், பிற்காலத்திலும், அறிவிற்கும், உடல் உணர்ச்சிக்கும் வருத்தம் எழாத அளவிலும், முறையிலும் செயலாற்றி இன்பமாக வாழலாம்.

"விருப்பம் சினம் வஞ்சம் மதம் பால்கவர்ச்சி

விளைவறியா கடும்பற்று என்ற ஆறும்,

உருக் குலைந்து நிறைந்த மனம், சகிப்புத்தன்மை,

உளமார்ந்த மன்னிப்பு, மெய் உணர்வு,

கருத்துடைய கற்பு நெறி, ஈகை என்ற

களங்கமிலா நற்குணங்க ளாக மாற்றும்,

பொருத்தமுள உளப்பயிற்சி முறை பயின்று,

புகழ் இன்பம் அமைதி பெற வாரீர்! வாரீர்!" (ஞா.க.1592)

பேராசையை நிறைமனமாகவும் - சினத்தை சகிப்புத் தன்மையாகவும்- கடும்பற்றினை ஈகையாகவும்- முறையற்ற பால் கவர்ச்சியை கற்பு நெறியாகவும்- உயர்வுதாழ்வு மனப்பான்மையை

நேர்நிறை உணர்வாகவும்- வஞ்சத்தை மன்னிப்பாகவும் மாற்றுவதே அறுகுண சீரமைப்பாகும் என்பது வேதாத்திரியம்.

# மெய்யறிவை நாடி மனித குலம் செல்ல வேண்டும்!

எத்தனையோ மனித உயிர்கள் வாழ்வின் நோக்கம் இன்னதென்று அறியாமல், கேவலம் உடல் சுகத்துக்காக, உண்டு உடுத்தி வாழ்ந்து இறந்து போவது அறியாமையாகும்.

நமக்குள் இருக்கும் இறைவனை அறிவதே நம் நோக்கமாக இருக்க வேண்டும்.

வாழ்வின் உண்மையான நோக்கம் இறைவனுக்காக அல்லது உண்மைக்காக வாழ்தல், குறைந்தபட்சம் தனது ஆன்மாவுக்காக வாழ வேண்டும்.

மனித வாழ்க்கை என்பது பணம் சம்பாதிப்பதற்கும் மற்றும் வசதி வாய்ப்புகளை பெருக்கிக் கொண்டு போவதற்கு மட்டுமா? என்றால், பதிலோ, இல்லை, என்பதுதான்.

வாழ்க்கை என்பது உடல் ஆரோக்கியத்துடனும், மன மகிழ்ச்சியுடனும், ஆன்ம தெளிவுடன் ஒவ்வொரு கணமும் ஒவ்வொரு நாளும் வாழ்வதற்கே!

பணம் நோக்கிய மனிதனின் வெளி நோக்கிய, உலகளாவிய பயணம். ஆரோக்கியம் நோக்கி சற்று உள் நோக்கிய பயணமாக திரும்ப வேண்டும். அதுதான் மன நிறைவின் முதல் படி.

## வாழ்வின் உயரிய நோக்கம் என்ன?

முதலில் ஒருவன் தன் அளவில் மன அமைதியுடன் இருக்க பழகிக் கொள்ள வேண்டும்.

பிறகு தான் அனுபவித்து வரும் மன அமைதி போல, உலகில் மன

அமைதிக்காக ஏங்கும் பல உயிர்களுக்கு வழிகாட்டியாக அமையுமாறு தன் வாழ்க்கையை அமைத்துக்கொள்வது, அல்லது அமைத்துக் கொள்ள முயல்வது, போன்றவைதான் மனித வாழ்வின் உயரிய நோக்கமாகும்......இதை நம்மில் எத்தனை பேர் உணர்ந்துள்ளோம்?

**வாழ்க்கை வரப்பிரசாதத்தை எண்ணிப்பாருங்கள்.**

உங்களுடைய வாழ்க்கையே உங்களுக்கு மிகப் பெரிய வரப்பிரசாதம்.

அத்தகைய வரப்பிரசாதத்தை ஒவ்வொரு நிமிடமும் நினைத்துப் பாருங்கள். இந்த உலகில் உங்களுக்கு கீழ் வசதி வாய்ப்புகள் இல்லாமல் வாழ்பவர்கள் கோடான கோடி மக்கள்.

அவர்களை பற்றி கண நேரம் நினைத்துப் பார்த்து, நம் வாழ்வில் நிம்மதி மட்டும் நாடாமல், அவர்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்கும் நம் உடலால், நம்முடைய அறிவால் என்ன செய்ய செய்ய முடியும் என்ற மாறுபட்ட எண்ணத்தை மனதில் விதைத்து, அதன்படி, செயல்களை வடிவமைத்துக் கொண்டு வாழ்க்கைப் பாதையை சீர்செய்து கொள்வோம்.

விஞ்ஞானத்திலுள்ள புதிர்களை எல்லாம் தீர்த்து வைத்து, மெய்யறிவை நாடி மனிதகுலம் முன்னேறத்தை நோக்கிச் செல்ல வேண்டும்.

எல்லாவற்றையும் கடந்து நிற்கும் அந்த மெய்ப்பொருளை, அருள்மயமாக நிற்பவரால் அறிய முடியுமே அல்லாது, உலகப் பற்றுடைய ஒருவரால் அறியமுடியாது என்கிறார் தாயுமானவர்.

தெருளாகி மருளாகி யஉழலும் மனமாய் மனம்

சேர்ந்து வளர் சித்து ஆகி, அச்

சித்து எலாம் சூழ்ந்த சிவ சித்துஆய். விசித்ரமாய்த்

திரமாகி. நானாவிதப்

பொருளாகி, அப்பொருளை அறிபொறியும் ஆகி,ஐம்

புலனுமாய். ஐம்பூதமாய்ப்,

புறமுமாய். அகமுமாய்த் தூரம் சமீபமாய்ப்.

போக்கொடு வரத்தும் ஆகி

இருளாகி ஒளியாகி, நன்மை தீமையுமாகி,

இன்றாகி, நாளையாகி,

என்றுமாய், ஒன்றுமாய்ப், பலவுமாய், யாவுமாய்,

இவையல்ல ஆயநின்னை

அருளாகி நின்றவர்கள் அறிவது அல்லால், ஒருவர்

அறிவதற்கு எளிதாகுமோ?

அண்ட பகிரண்டமும் அடங்க ஒரு நிறைவாகி

ஆனந்தம் ஆனபரமே." (தா.பா.68)

- தெளிவாகவும்,
- மயக்கமாகவும்,
- அலைந்து திரிகின்ற மனமாகவும்,
- மனத்தோடு சேர்ந்து வளரும் அறிவாகவும்,
- அந்த அறிவெல்லாம் சூழ்ந்து நிற்கும் பேரறிவான சிவஞானமாகவும்,
- வியப்புக்கு உரியதாகவும்,

- வலிமை பொருந்திய பலவிதமான பொருள்களாகவும்,
- அப்பொருள்களை அறியும் ஐந்து பொறிகளாகவும்,
- ஐந்து புலன்களாகவும்,
- ஐம்பூதங்களாகவும்,
- புறமாகவும்,
- அகமாகவும்,
- தூரமாகவும்,
- அருளாகவும்,
- போக்காகவும்,
- வரவாகவும்,
- இருளாகவும்,
- ஒளியாகவும்,
- தன்மையாகவும்,
- தீமையாகவும்,
- இன்றாகவும்,
- நாளையாகவும்,
- என்றுமாகவும்,
- ஒன்றாகவும்,
- பலவாகவும்,
- யாவையுமாகவும்

என்று எல்லாவற்றையும் கடந்து நிற்கும் உன்னை, அருள்மயமாக நிற்பவரால் அறிய முடியுமே அல்லாது, உலகப் பற்றுடைய ஒருவரால் அறியமுடியுமோ? என வேதனைப்படுகிறார் தாயுமானவர்.

## அருள்மயமாக நிற்பவரால் அறிய முடியும்

பஞ்சேந்திரியங்கள் கொண்டு உலகைப் பார்ப்பவர்கள் மருள் நிலையை அடைகின்றார்கள். பஞ்சேந்திரியங்களைக் கொண்டு இறைவனை வழிபடுபவர்கள் அருள் நிலையை அடைகிறார்கள்.

அருள் நிலையை அடைகின்றவர்கள் அனைத்தையும் இறைசொரூபமாக காண்கின்றனர்.

மருள்நிலைக்கு ஆளாகின்றவர்கள் தங்களிடம் ஜீவபோதத்தை வளர்த்து அக்ஞானத்துக்கு ஆளாகின்றார்கள். மேலும் அவர்கள் சிற்றின்பத்தில் மயங்கிச் சிறுநெறியில் வாழ்கிறார்கள்.



பஞ்சேந்திரியங்களையும் இறைவழிபாட்டில் ஈடுபடுத்தி அருள்நிலையைத் தம்மிடத்தல் உண்டாக்கியவர் இராமகிருஷ்ணர்.

அவர் வாழ்வு அருள் வாழ்வுக்கு விளக்கமாக அமைகின்றது. பஞ்சேந்திரியங்கள் மூலமாக அவர் அனுபவித்தது பாரமார்த்திக இன்பமேயாகும்.

ஒரு சமயம் அவர் வயல் வழியாகப் போய்க் கொண்டிருந்தபொழுது பசுமையான வயலுக்கு மேல் வெண்மையான கொக்குக் கூட்டம் பறந்து சென்றது.

அதற்கு மேல் வானில் கருமையான மேகக்கூட்டம் படர்ந்திருந்தது. பசுமை, வெண்மை, கருமை ஆகிய மூன்று வர்ணங்களையும் ஏக காலத்தில் பார்க்கும் பொழுது இயற்கையின் பேரழகு அவருடைய உள்ளத்தை அருள் நிலைக்கு எடுத்துச் சென்று விட்டது.

மற்றொரு சமயம் அவர் மேனியின் மீது சிவசின்னங்களை அணிந்து அவருக்குச் சிவ வேடமணிந்த பொழுது அவருடைய உள்ளம் சிவசொரூபத்தில் லயமாகிப் பேரின்பத்தில் திளைத்திருந்தது.

தெய்வப் பிரசாதத்தை அவர் வாயில் போட்டால் அவர் உள்ளம் அதீத நிலைக்குப் போய் விடும்.

விவேகானந்தர் தெய்வீகப் பாடல்களை இராமகிருஷ்ணர் முன் பாடினால் அதைக் கேட்கும் பொழுது அவர் உள்ளம் அதீத நிலைக்குப் போய்விடும்.

நறுமணத்தைப அவர் நாசியின் மூலம் சுவாசிக்கும் பொழுது அவருடைய உள்ளம் அருள் நிலைக்குப் போய்விடும். பஞ்சேந்திரியங்கள் மூலம் அவர் பர தரிசனத்தையே பெற்று வந்தார்.

அருள்குரு இத்தகைய தெய்வீகக் காட்சியைக் காண்பதற்குரிய உபதேசத்தைச் செய்கிறார்.

ஆனால் அருளுக்குப் பாத்திரமாகாதவர்கள் தங்கள் அறிவைக் கொண்டு உலகைக் காண்கிறார்கள்.

அறிவைக் கொண்டு உலகைப் பலப்படுத்தும் பொழுது நம்மிடத்தில் ஜீவபோதம் வளர்கின்றது.

ஜீவ போத்திலிருந்து ஆசை, ஆணவம், அகங்காரம் ஆகியவைகள் தோன்றி நம் அறிவை மயக்குகின்றன.

அருள் நிலையில் பார்க்கும் பொழுது தெய்வமாகத் தோன்றுகின்ற ஒன்று அறிவைக் கொண்டு பார்க்கும் பொழுது உலகமாகத் தென்படுகிறது.

இதைத்தான் “அருளால் எவையும் பார் என்றான் – அத்தை அறியாதே சுட்டி என் அறிவாலே பார்த்தேன்” என்றார் தாயுமானவர் குறிப்பிடுகின்றார்.

வேதாத்திரி மகரிசியோ, பற்றற்ற வாழ்வு வாழ வழிகாட்டி எல்லாவற்றையும் கடந்து நிற்கும் சுத்தவெளியை அறியலாம் என்கிறார். எப்படி?

மனித வாழ்வின் நோக்கம் இனிமையாக வாழ்வது ஆகும். இயற்கைக்கு முரண்பட்டும் சமுதாய உணர்வு இன்றியும் வாழ்ந்து பல லட்சக்கணக்கான பிறவிகளைத் தாண்டி வந்துள்ள மனிதகுலத்திலே இனிமை இல்லை.

ஆறாவது அறிவு எனும் உண்மைப்பொருள் மேன்மைப் பொருளான மனமாக மலர்ந்துள்ளது என உணர்ந்து, தானும்இனிமையாக வாழ்ந்து மற்றவர்களையும் வாழ வைக்கக் கூடிய தனது தெய்வீகப் பண்பை மனிதன் மறந்து விட்டான்.

சுயநல நோக்கத்தோடு, இனம் என்றும் சாதி என்றும் தேசம் என்றும் மொழி என்றும் மதம் என்றும் எல்லைகட்டிய மனதினால் பாசம் பற்றுக்களில் சிக்கிக் கொண்டுள்ளான்.

இயற்கையின் அமைப்பையும், இயக்க ஒழுங்கையும்.செயல்விளைவு நியதியையும் அறிந்து, புரிந்து, உணர்ந்து அந்த இயற்கையின் ஒரு பகுதி அறிவு தன்னில் இருப்பதை உணர்ந்து, எல்லா சீவ இனங்களிலும் உயர்ந்த சீவனாக மனிதனாக இருப்பதையும் உணர வேண்டும்.

அந்த உணர்வில், மன விரிவின் காரணமாக பாசம் பற்று என்பவைகள் மறந்து பிறர் துன்பம் தீர்க்கும் செயல்கள் மலரும். இத்தகைய பற்றற்ற வாழ்வினால் மானுடம் இறைநிலை உணர்வு பெறும்.

"இனம் சாதி, தேசம்மொழி, மதம் பற்றற்று
இயற்கையமைப்பு அறிவுநிலை அறிந்து, மேலாம்
மனிதனென்ற ஒரு நினைவில், பாசம் பற்றை
மறந்துதொண் டாற்றி பிறர் துன்பம் தீர்க்கும்
புனித உள்ளம் செயலுடையோர் எண்ணிறந்தோர்.
புவிமீது அதிகரிக்க அதிகரிக்க
கனிவுமிகும். அருள்பெருகும். சமுதாயத்தின்
களங்கங்கள் மறைந்து விடும். உலகம் உய்யும்." (ஞா.க.422)

பற்றற்ற வாழ்வை வாழ்ந்து ஆனந்தமான பரத்தை உணர்ந்து நாமும் ஆனந்தமாக வாழ்வோம். ஆனந்தம். ஆனந்தம். ஆனந்தமே. வாழத் தெரிந்திடில் ஆனந்தமே.

# துறவு முத்திரையில் மோசம்

ஈட்டல், காத்தல் ஒழித்து எல்லோர்க்கும் பெருமகனாய் வாட்டும் பசிக்குப் பிறர் வழங்க ஏற்று உணவுண்டு. போட்டி, பிணக்கு, பகை, போர், நோய்கள் அற அறிவையூட்டும் அருள் நெறியே உயர்ந்த துறவறம் ஆகும்.

ஆனால்......இன்று நாள்தோறும் செய்திகளில் துறவு முத்திரையில் மோசம் செய்யும் போலி சாமியார்களைப் பற்றி செய்திகள் வந்து கொண்டே இருக்கின்றன.

பலர் தங்களது பொருள்களையும் கற்பினையும் இழந்து வாடுவதையும் காண்கிறோம். மக்களின் மயக்க நிலையும் அறியாமையும்தான் இதற்கு காரணம்.

சமுதாயத்தில் போலி மதவாதிகளையும் போலி சாமியார்களையும் உலாவவிட்டு வரும், இறைநிலையின் திருவிளையாடலை – இந்தப் பாடலில் தாயுமானவர் எள்ளி நகையாடுகிறார்.

மாறுபடு தர்க்கநம் தொடுக்க அறி வார். சாண்
வயிற்றின் பொருட்டது ஆக
மண்தலமும் விண்தலமும் ஒன்றாகி மனதுஉழல
மாலாகி நிற்கஅறிவார்.

வேறுபடு வேஷங்கள் கொள்ள அறி வார் ஒன்றை
மெணமெணென் று அகம்வேறதாம்

வித்தைஅறி வார். எமைப் போலவே சந்தைபோல்

மெய்ந்நூல் விரிக்கஅறிவார்

சீறுபுலி போற்சீறி மூச்சைப் பிடித்துவிழி

செக்கச் சிவக்க அறிவார்.

திரமென்று தம்தம் மதத்தையே தாமதச்

செய்கைகொடும் உளற அறிவார்.

ஆறு சம யங்கள் தொறும் வேறுவேறு ஆகிவிளை

யாடும்உனை யாவர் அறிவார்?

அண்டபகி ரண்டமும் அடங்க ஒரு நிறைவாகி

ஆனந்த மானபரமே." (தா.பா.69)

- ஒரு சாண் வயிற்றை வளர்ப்பதற்காக கருத்து மாறுபாடு கொண்டு விவாதம் புரிவார்கள்.
- நிலவுலகும் வானவுலகும் ஒன்றாகுமாறு பேராசை கொண்டு, மனம் அலைந்து திரிய, மயக்க உணர்வுடன் இருக்க அறிவார்கள்.
- பல வேறுபட்ட கோலம் கொள்ள அறிவார்கள்.
- ஒரு மந்திரத்தை முணுமுணுத்துக் கொண்டே, மனத்தை வேறுபக்கம் அலையவிடும் வித்தையை அறிந்திருப்பார்கள்.
- பலசரக்குக் கடைபோல் பல சமயநூல் கருத்துக்களைக் கற்று, என்போல் கடைவிரிக்க அறிவார்கள்.

- புலிபோல் சீறி மூச்சை உள்ளே இழுத்தும் வெளியே விட்டும் பிராணாயாமம் செய்து, விழி சிவக்க நிற்பார்கள்.
- தம்முடைய மதமே வலிமை உடையது என்று தாமச குணத்தில் நின்று பிதற்ற அறிவார்கள்.
- ஆறுவகைச் சமயங்களிலும் வேறு வேறு பெயர்களில் வெளிப்பட்டு நின்று விளையாடும் உமது திருவிளையாடலை யாரால் அறிந்து கொள்ள முடியும்?

துறவு வேடத்தில் வேடமிட்ட துறவிகளை சாடுகிறது வேதாத்திரியம். துறவு என்றால் தவ வாழ்வு ஆகும்.

உலகியல் பற்றுக்களிலிருந்து தம்மை விடுவித்துக் கொண்டு. தவவாழ்வை மேற்கொண்டு இறை இணைப்பில் இருப்பவர்கள் முனிவர்கள், ரிஷிகள், ரிஷிமார்கள்.

அவர்கள் தங்களுக்காக வாழாமல் மிச்சமிருக்கும் தமது கர்ம வினைகளை கழித்துக் கொள்வதற்காக மற்றவர்களுக்காக வாழ்ந்து கொண்டிருப்பவர்கள்

ஆனால் உழைக்காமல் பிழைக்க எண்ணும் சிலர் துறவிகளைப் போல தம்மை அலங்கரித்து வேடம் போட்டுக் கொள்வார்கள்.

அப்படிப்பட்டவர்களால் மக்களுக்கு ஏற்படும் தீமைகள் கொஞ்சமல்ல. அவர் மீது கொண்ட நம்பிக்யைால் பலரும் அவருக்கு சீடர்களாகச் சேர்ந்து கொள்வார்கள்.

சிந்தனை ஆற்றல் இன்றி மயக்க நிலையில் இருக்கும் அவர்களிடம், தந்திரங்கள் மூலம் சித்துக்களைச் செய்து காட்டியும், சொல் வன்மையைப் பயன்படுத்தியும் தந்திரமாகப் பேசி அவர்களை நம்ப வைப்பார்கள்.

பின்னர் அவர்களது பொருட்களைக் கவர்ந்து கொள்வார்கள். நாட்டு மக்களே இந்த உண்மையை அறிவார்கள்.

பல பேர் தமது கற்பு நெறியை, நயவஞ்சகர்களால் இழந்து வருந்தி துன்புறுகிறார்கள். துறவு என்ற பொய்யான அடையாளத்தினால் உழைக்காமல் பிழைப்பவர்கள், மக்களை ஏமாற்றுகிறார்கள்.

"வேடமிட்ட துறவிகளால் விளையும் தீங்கை

விவரிக்க முடியாது. கொஞ்சமல்ல!

சீடர்களாய்ப் பலர்சேர்வர் பக்தியாலே!

சிந்திக்கும் ஆற்றலில்லா அன்னார் நம்ப,

சோடனைகள் சித்துக்கள் செய்து காட்டி,

சொல்வன்மையால் பொருளைக் கவர்ந்து கொள்வார்.

நாடறிந்த உண்மையிது! பலபேர் கற்பை

நய வஞ்சகத்திற்கு இழந்து வருந்து கின்றார்." (ஞாக.பா.1354)

துறவறத்தான் என்றால் பொருளீட்டிக் காப்பது தவிர்த்து. அறிவுத் துறையில் உயர்ந்து தொண்டாற்றிக் கொண்டு இருப்பவன் என்கிறது வேதாத்திரியம்.

இராமகிருஷ்ண பரமஹம்சரின் குட்டிக் கதை ஒன்று உண்டு. துறவியாகிறேன் என்றான் கணவன். அவன் துறவு நெறிக்குப் பக்குவப்படாதவன் என்பதை உணர்ந்தவள் அவன் மனைவி.

சரிதான், நானும் துறவினியாக உடன் வருகிறேன் என அவன் பின்னே நடந்தாள் அவள். அவனால் மறுக்க இயலவில்லை.

ஆற்று மணலில் கானகம் நோக்கி அவர்கள் நடந்தபோது, மண்ணில் ஒரு வைரக் கல் பளபளவென மினுமினுத்தது.

அடடா, பெண்களுக்குத் தங்கம் வைரம் என்றால் ஆசை வருமே, தன் மனைவி இந்த வைரத்தைப் பார்த்து ஆசைப்பட்டால் அவள் துறவு நெறிக்கு அது பழுதல்லவா என யோசித்தான் கணவன்.

எனவே போகிற போக்கில் காலால் மணலை எத்தித் தூவி அந்த வைரக்கல் மேல் மணலைப் போட்டு மூடிவிட்டு நடந்தான்.

பின்னால் அவனைத் தொடர்ந்த மனைவி வைரக்கல்லையும் பார்த்தாள். கணவன் மனப்போக்கையும் ஊகித்தாள்.

`அன்பரே! வைரக்கல்லுக்கும் மண்ணாங்கட்டிக்கும் வித்தியாசம் தெரிகிறபோது உமக்கெதற்குத் துறவு? வீட்டுக்கு வாரும்! என

அழைத்தாள் அவள்!

`தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி

வலைப்பட்டார் மற்றை யவர்.' (திருக்குறள்)

எல்லாப் பற்றையும் முற்றும் துறந்தவர்களே துறவறத்தில் சிறந்தவர் ஆவர்.

வேதாத்திரியமோ "உறவிலே கண்ட உண்மைத் தெளிவே துறவு" என்று நம்மை தெளிவுபடுத்தி, ஆனந்தமாக வாழும் முறையையும் வகுத்துத் தந்துள்ளது.

# துறவு முத்திரையில் மோசம்

மனித வாழ்வு என்பது இறைநிலையை நாடிய அறிவின் பயணம்.

இறைநிலையை உணர உணர வாழ்வினிக்கும். அறநெறியாய் வாழ்வதற்கு வழி வகுக்கும். நல்லதையே செய்யச் செய்ய நல்ல எண்ணங்கள், நல்ல செயல்கள், நல்ல வாழ்க்கை வந்துவிடும்.

உலக வாழ்வை விரும்புதல் முறையாகுமோ? என்று வருந்துகிறார் இந்தப் பாடலில் தாயுமானவர்.

காய் இலை உதிர்ந்த கனி சருகுபுனல் மண்டிய
கடும்பசி தனக்கு அடைத்தும்
கார்வரையின் முழையில் கருங்கல் போல அசையாது
கண்மூடி நெடிது இருந்தும்.

தீயினிடை வைகியும். தோயம் அதில் மூழ்கியும்
தேகங்கள் என்பு எலும்பாய்த்
தெரியநின் றும். சென்னி மயிர்கள் கூடாக்குருவி
தெற்ற வெயி லூடடு இருந்தும்.

வாயுவை அடக்கியும் மனதினை யடக்கியும்
மௌனத்திலே இருந்தும்
மதிமண்ட லத்திலே கனல்செல்ல அமுது உண்டு
வனமூடி ருந்தும். அறிஞர்

ஆயும் மறை முடிவு ஆன அருள்நாடி னார் அடிமை

அகிலத்தை நாடல்முறையோ?

அண்டபகி ரண்டமும் அடங்க ஒரு நிறைவாகி

ஆனந்த மானபரமே.” (தா.பா.70)

- கடும்பசியைப் போக்கிக் கொள்ள காய், இலை, உதிர்ந்த கனி, சருகு, நீர் முதலியவற்றை உணவாக உண்டும்.
- மலையில் உள்ள இருண்ட குகைளில் கருங்கல் போன்று அசையாது அமர்ந்து கண்மூடி நீண்டநேரம் தவம் இயற்றியும்,
- நெருப்பின் நடுவே நின்றும்,
- புனித தீர்த்தங்களில் நீராடியும்,
- உடம்பில் எலும்புகள் தெரிய விரதம் இருந்தும்,
- தலைமயிரை கூடுபோல் வளர்த்து அதில் குருவி வந்து தங்கவும்,
- வெயிலில் அலைந்தும்,
- பிராணனை அடக்கியும்,
- மனத்தினை கட்டுப்படுத்தியும்,
- மௌன நிலையில் இருந்தும், மூலாதராத்தில் மூண்ட நெருப்பால் குண்டலினி ஆற்றல் சந்திரமண்டலத்தைச் சென்றடைய, அங்கு சுரக்கும் அமுதத்தைஉண்டு, காடுகளின் நடுவே இருந்தும்,

அறிஞரானவர் ஆராய்ந்து. வேத முடிவாய் விளங்கும் திருவருளை நாடி நின்றார்கள்.

அவ்வாறு இருக்க அடிமையாகிய நான் மட்டும் உலக வாழ்வை விரும்புதல் முறையாகுமோ? என்று வருந்துகிறார் தாயுமானவர்.

உலக வாழ்க்கையை உயர் வாழ்க்கையாக வழி காட்டுகிறது வேதாத்திரியம். எப்படி?

"எண்ணிந்த மதங்கள் உண்டு மனிதருக்கு,

எனினும் தெய்வம் என்பது ஒன்றே ஆகும்.

நுண்ணி ஆராய்ந்தறிந்த அறிஞர் செய்த

நூல்கள் எல்லாம் மனிதர் தங்கள் முயற்சி யாலே

எண்ணத்தைத் தியானத்தால் பண் படுத்தி,

எங்கும் நிறை பூரணத்தின் தன்மை கண்டு.

மண்ணுலகில் ஏழ்மை, பஞ்ச பாத கத்தை

மாற்றி உணர் வாய் வாழும் வழியைக் காட்டும்!" (ஞாக.பா.618)

மனிதன் சிக்கல் இல்லாமல் மனித நேயத்தோடு இனிமையாக வாழ்வதற்காக, அவ்வக் காலங்களில் ஆங்காங்கே தோன்றிய மகான்கள் சொல்லிய கருத்துக்கள் எல்லாம் அவர்களுக்குப் பின் வந்தவர்களால மதம் என்ற வார்த்தையால் குறிக்கப்பட்டது.

எண்ணிக்கைக்கு அடங்காத வகையில் மனிதர்களுக்கு மதங்கள் இருக்கின்றன. ஆனாலும் அவர்கள் குறிப்பிடக்கூடிய தெய்வம் என்பது ஒன்றுதான்.

மனிதனால் செய்ய முடியாததை எல்லாம் செய்யக்கூடிய மாபெரும் ஆற்றலை தெய்வசக்தி என்றும் அதற்கு அவரவர்க்கு தெரிந்த மொழிகளில் பெயரிட்டிருக்கிறார்கள்.

நுண்மாண் நுழை புலனறிவில் அறிஞர்கள் ஆராய்ந்து அறிந்து உண்மைகளை நூல்களாக வழங்கியுள்ளார்கள்.

அவைகள் மனிதர்கள் தங்களது சொந்த முயற்சியின் மூலம் தியானம் செய்து எண்ணங்களைப் பண்படுத்தி, மனதைச் சீர்செய்து எங்குமே நிறைவாக உள்ள பூரணமான தெய்வீகத்தின் தன்மைகளைக் காண வேண்டும்.

நில உலகிலே ஏழ்மை என்ற வறுமையையும் ஐந்து பெரும் பழிச் செயல்களையும் மாற்றிக் கொள்ள வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துகின்றன.

மனிதன் சிறப்பாக வாழ்வதற்கான வழிமுறைகளையே காட்டுவதாக மத நூல்கள் உள்ளன.

எனவே உலக வாழ்க்கை முறையோடும் அளவோடும் வேதாத்திரியம் வகுத்தவாறு வாழ்ந்தால், உலக வாழ்க்கை உயர் வாழ்க்கையாக

அமையும். நமது வாழ்க்கையும் ஆனந்தமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

# எல்லாம் மெய்ப்பொருளே

மெய்ப்பொருள் என்ற சுத்தவெளி தான் மூலம் என்பதை பதஞ்சதஸி வலியுறுத்வதைக் நாம் காணலாம்.

"வ்ருசஷஸ்ய ஸ்வகதோ பேதஹ புஷ்ய பலிபிஹி

விருச்சாந்தத்ராத ஸிாதீயோ விஜாதீய ஷ்ஷிலதிதஹ" (11-20)

ஒரு மரத்தில் காய், கனி என அதன் அங்கங்களில் நாம் காணும் பேதம். மரத்திற்கு மரம் நாம் காணும் பேதம்.

தாவர இனத்திற்கும், விலங்கினத்திற்கும் உள்ள இனபேதம், எனப் பலவகையான பேதங்களை பிரபஞ்ச அமைப்புகளில் நாம் பார்க்கிறோமென்றாலும் அவைகளின் மூலம் ஒன்றுதான். எல்லாம் மெய்ப்பொருளே.

மெய்பொருள்தான் மரமாகியது. பாம்பாகியது. விலங்கினமாகியது. மனிதனாகியது.

தன்னை முழுமுதல் பொருளோடு ஐக்கியப்படுத்தி, அந்த முழுமுதற் பொருளான இறைவெளியின் தன்மாற்றச் சரித்திரத்தை தனது சரித்திரமாக உணர்ந்த நிலையில் திருவாசகம் தந்துள்ளது.

"புல்லாகிப் பூடாய்ப் பழுவாய் மரமாகிப்

பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்

கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்

வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்

செல்ல அநின்ற இத்தாவர சங்கதமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்." (திருவாசகம்)

மாணிக்கவாசகரைப் போலவே, தெய்வம் என்ற மெய்ப்பொருளே அனைத்துமாக இருக்கிறது இருக்கிறது என்று ஐந்தாவது பாடலில் தாயுமானவர் பாடுகிறார்.

தாயுமானவர் முதல் பாடலிலேயே" இறைநிலை "அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் உள்ளது" என்று சொன்னதை, தொடர்ந்து தனது பாடல்களிலே மெய்ப்பொருளான சுத்தவெளியே அனைத்துமாக உள்ளது என்றும், நாமாகவும் இருக்கிறது என்று பாடுகிறார்.

சுத்தமும் அசுத்தமும். துக்கசுக பேதமும்

தொந்தமுடன் நிர்த்தொந்தமும்.

ஸ்தூலமொடு சூட்சமமும். ஆசையும் நிராசையும்.

சொல்லும் ஒரு சொல்லின் முடிவும்.

பெத்தமொடு முத்தியும் பாவமொடு அபாவமும்.

பேதமொடு அபேதநிலையும்.

பெருமையொடு சிறுமையும் அருமையுடன் எளிமையும்.

பெண்ணினுடன் ஆணும். மற்றும்

நித்தமும் அநித்தமும். அஞ்சன நிரஞ்சனமும்.

நிஷ்களமும் நிகழ்சகளமும்.

நீதியும் அநீதியும். ஆதியோடு அநாதியும்

நிர்விஷய விஷய வடிவும்.

அத்தனையும் நீஅலது எள் அத்தனையும் இல்லை எனின்

யாங்கள் உனை அன்றி உண்டோ?

அண்டபகி ரண்டமும் அடங்க ஒரு நிறைவாகி

ஆனந்த மானபரமே." (தா.பா.71)

- தூய்மையும், தூய்மையற்றதும்,
- துன்பமும், இன்பமும்.
- தொடர்பும், தொடர்பின்மையும்.
- பருமையும், நுண்மையும்,
- விருப்பமும், விருப்பமின்மையும்.
- சொல்லும், சொல்லக் கூடிய சொல்லின் பொருளும்.
- கட்டுநிலையும், வீட்டு நிலையும்.
- நினைத்தலும், நியைாமையும்.
- வேறுபட்டும், வேறுபடாதும்.
- பெருமையும், சிறுமையும்.
- அருமையும், எளிமையும்.
- பெண்ணும், ஆணும்.
- அழியாமையும்,அழிவுள்ளதும்.

- வடிவின்மையும், வடிவம் உடையதும்.
- நீதியும், நீதியின்மையும்.
- தொடக்கமும், தொடக்கம் இல்லாததும்.
- கண்ணுக்குப் புலப்படுவதும், கண்ணுக்குப் புலப்படாததும் ஆகிய அத்தனையும் நீயே அன்றி, எள் அளவும் வேறு பொருள் இல்லை என்னும்போது, நாங்கள் உன்னை அன்றி உண்டோ?

அருட்தந்தை வேதாத்திரி மகரிஷியும் "எல்லாம் மெய்ப் பொருளே" என்ற தலைப்பில் ஞானக்களஞ்சியத்தில் பல இடங்களில் பதிவு செய்துள்ளார்.

"அருவமே உருவமாய், ஆதியே அறிவாய்,
அறிவே குணங்களாய், அனுபவம் ஒழுக்கமாய்,
இருளே வெளிச்சமாய், இன்பமே துன்பமாய்,
மௌனமே சப்தமாய், மாறியது அறிவீர்" (ஞாக.பா.1129)

பிரபஞ்சத்தில் நாம் காணும் அனைத்தும் சடப்பொருள்கள், சீவன்கள் என்னும் இரு தோற்றங்கள் ஆகும்.

தோற்றங்கள் அனைத்தும் உருவங்களாக எல்லை கட்டி இயங்குகின்றன. அந்த இயக்கங்களை எல்லாம் கழித்து விட்டால் இருப்பு ஆகிய அரூபமே உள்ளது.

எனவே அரூபமே தன் நிலையில் பெற்ற மாற்றமே உருவங்களாகி உள்ளது. அந்த அரூபத்திற்கு முன்னதாக எதுவுமில்லை.

ஆதலால் அதுவே ஆதியானது. ஒவ்வொரு இயக்கமும் இப்படித்தான் இயங்க வேண்டும் என்ற ஒழுங்கு தவறாது நடைபெறுவதால் அரூபமே அறிவாகவும் உள்ளது.

அந்த அறிவே சடப்பொருட்களில் அதனதன் தன்மையாக சீவன்களில் மனமாக, மனிதனில் அனுமானம் என்னும் அறிவாக குணங்களாக வெளிப்படுகிறது.

அந்த குணமே் மனித மனமாக அனுபவங்களாக, அந்த அனுபவங்களும் ஒழுங்கு முறையாக வெளிப்படுகிறது.

இருள் என்ற இருப்பே, வெளிச்சம் என்ற இயக்கமாகவும், இன்பம் என்று மனம் கருதுவது இயற்கைக்கு முரணாகும் போது துன்பமாகிது.

ஓங்காரம் என்ற மௌனமே இயக்கத்தில் ஒலியாக மாறுகிறது. இருப்பு என்பதே இயக்கமாகவும் இயக்கம் என்பதே இருப்பாகவும் அந்தந்த நிலைக்கேற்ப கருதப்படுகிறது.

ஆகவே நாம் காணும் அனைத்துமே மெய்ப்பொருளாகிய இறைநிலையேயாகும்.

---

# இறையுணர்வு பெற அகத்தவமும் அகத்தாய்வும் வேண்டும்

இறை நாட்டம் கொண்டவர்கள், இறைவனைக் குறித்து சான்றோர்கள் கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளும் அமைப்பே இந்து சமயத்தில் சத்சங்கம் என்பர்.

பொதுவாக குரு, மகான்கள் போன்ற சான்றோர்களிடம் அருகே இருந்து ஆன்மித் தேடலில் ஈடுபட்டுள்ள சாதகர்கள் இறைவனைக் குறித்து அறிந்து கொள்ளும் இடமாகக் கொள்ளலாம். சுருக்கமாக சான்றோர்களின் கூட்டே சத்சங்கம் என அறியப்படுகிறது.

சத்சங்கத்தின் அர்த்தமானது பூரண சத்தியமான இறைவனின் சங்கம் என்பதாகும். அதாவது ‘சத்’ என்பது பூரண சத்தியத்தையும் ‘சங்கம்’ என்பது சாதகர்கள் அல்லது மகான்களின் சகவாசம் என்பதாகும்.

சுருக்கமாக சொல்வதெனில் சத்சங்கம் இறைவனின் இருப்பை அனுபவிப்பதற்கு உகந்த சூழலாகும்.

நாமஜபம் செய்ய துவங்கிய பின் ஒருவர் செய்யக்கூடிய அடுத்தகட்ட பயிற்சி இதுவாகும். அதனால் நாமஜபம் செய்வது நிறுத்தப்படும் என்பது பொருளல்ல.

இறைவனின் நாமத்தை உச்சரிப்பதோடு சத்சங்கங்களுக்கும் செல்ல வேண்டும். ஒரே எண்ணம் கொண்ட (அதாவது இறைவனை உணர்தல்) நபர்களுடன் தொடர்ச்சியாக கலந்துரையாடல் செய்வதற்கு இது ஏதுவாக அமையும்.

சத்சங்கம் என்பதின் அர்த்தத்தை புரிந்துக்கொள்வதாலும் சத்சங்கத்திற்கு செல்வதாலும் பல நன்மைகளை பெற முடியும்.

ஆன்மீக சாஸ்திரத்தை பற்றிய சந்தேகங்களை கேட்டு தெளிவுபடுத்திக் கொள்ள முடியும்.

ஆன்மீக பயிற்சி அல்லது ஆன்மீக தத்துவங்கள் தொடர்பாக ஏதேனும் ஐயமிருப்பின் அவை உடனுக்குடன் தெளிவுபடுத்தப்படவேண்டும். இல்லாவிட்டால் மனப்பூர்வமாக ஆன்மீக பயிற்சியை மேற்கொள்ள முடியாது போகும்.

ஒருவர் தன்னுடைய ஆன்மீக அனுபவத்தை பகிர முடிவதோடு அதற்குரிய ஆன்மீக முக்கியத்துவத்தையும் புரிந்து கொள்ள முடிகிறது.

மற்றவரின் நம்பிக்கை பற்றி தெரிந்து கொள்வது நமக்கு ஆன்மீகப் பயிற்சியினை தொடர்ச்சியாக செய்ய ஊக்கம் அளிக்கிறது.

சூட்சும நிலையில் ஒருவர் தெய்வீக உணர்வினை (சைதன்யம்) சத்சங்கம் மூலம் பெறுகிறார். சத்சங்கத்தின் அதிகரிக்கப்பட்ட சாத்வீக தன்மை ஒருவரின் ஆன்மீக பயிற்சிக்கு பெரிதும் உதவுகிறது.

சுற்றுச்சூழலில் உள்ள ரஜதம அணுக்களால் ஆன்மீக மாசடைவு ஏற்படுவதால் இறைவனை பற்றி நினைப்பதற்கும் ஆன்மீக பயிற்சி செய்வதற்கும் கடினமாக உள்ளது.

இருப்பினும் நாள் முழுவதும் நாமஜபம் செய்பவர்களின் சகவாசத்தில் இருக்கும்போது இதற்கு எதிர்மாறான பலன் கிடைக்கிறது!

சாதகர்களிடமிருந்து வெளிப்படும் சாத்வீக அதிர்வலைகளால் அல்லது தெய்வீக உணர்வினால் நாம் பயனடைகிறோம்.

சத்சங்கத்தினுள் நுழையும் போது வாழ்க்கையில் மிகவும் அடிபட்டு வேதனையுடன் சென்றாலும் சத்சங்கம் முடிவடைந்து வெளியேறும்போது உள்ளிருந்து புதுப்பிக்கப்பட்டு முற்றிலும் புதிதாக உணருவோம்.

இத்கைய சத்சங்கத்தை தான் தாயுமானவர் “அடியார் கூட்டம்” என்று

அழைக்கிறார்.

இறையுணர்வு பெற்று ஆணவத்தை அழித்து, தன்முனைப்பை பொசுக்கி, மௌனத்தில் இருந்து, உலக மாயையிலிருந்து விலகி, அன்பு ஊற்றாக வாழ்ந்து, பேரின்ப களிப்பில் திளைத்து இருக்கும் அடியார் கூட்டத்தில் சேர்ந்திருக்குமாறு வழி வகை செய்ய பிரார்த்தனை செய்கிறார் தாயுமானவர் இப்பாடலில்.

கார் ஆரும் ஆணவக் காட்டைக் களைந்து, அறக்
கண்டு அகங் காரமென்னும்
கல்லைப் பிளந்து, நெஞ்ச அகமான பூமிவெளி
காணத் திருத்தி. மேன்மேல்

பார் ஆதி அறியாத மோனமாம் வித்தைப்
பதித்தது அன்பு நீர ஆகவே
பாய்ச்சி, அது பயிராகும் மட்டுமா மாயைவன்
பறவை அணுகாத வண்ணம்

நேராக நின்று, விளை போகம் புசித்து உய்ந்த
நின் அன்பர் கூட்டம் எய்த,

நினைவின் படிக்குநீ முன்நின்று காப்பதே
நின் அருள் பாரம் என்றும்.

ஆர் ஆரும் அறியாத சூதான வெளியில் வெளி
ஆகின்ற துரிய மயமே

அண்டபகி ரண்டமும் அடங்க ஒரு நிறைவாகி

ஆனந்த மான பரமே. (தா.பா.72)

- அடர்ந்த இருள்போல் விளங்கும் ஆணவ மலமாகிய காட்டினை அழித்து, வெட்ட வெளியாக்கி,
- அகங்காரம் எனப்படும் தன்முனைப்பாகிய பாறையைப் பிளந்து,
- மனமாகிய பூமியை அனைவரும் காணுமாறு பண்படுத்தி,
- மேலும் மேலும் மண் முதலிய பூதங்கள் மறைக்கா வண்ணம் மௌனமாகிய விதையை விதைத்து,
- அன்பு என்னும் நீரைப் பாய்ச்சி,
- அது பயிராகத் தழைத்து வளரும் வரை உலகமாயை என்னும் பறவை நெருங்காதபடிக் காப்பாற்றி,
- சிவபோகம் என்னும் விளைச்சலை அனுபவித்துக் கடைதேறிய நினது அடியார் திருக்கூட்டத்தோடு சேர்ந்திருக்குமாறு செய்து,

நீ முன் நின்று காப்பதே நினது கடமை ஆகும்.

இறையுணர்வு பெற்று ஆணவத்தை அழித்து, தன்முனைப்பை பொசுக்கி, மௌனத்தில் இருந்து, உலக மாயையிலிருந்து விலகி, அன்பு ஊற்றாக பேரின்ப களிப்பு அடைய என்ன செய்ய வேண்டும்?

அகத்தவம் செய்ய வேண்டும். தற்சோதனை பழக வேண்டும். இதைத்தான் வேதாத்திரியம் மனவளக்கலை மன்றங்களிலே பயிற்சியாக சொல்லித் தருகிறார்கள்.

தற்சோதனையின் அவசியத்தை வேதாத்திரியம் வலியுறுத்துகிறது.

“தனது குறை ஆழ்ந்துணர்ந்து திருத்தம் பெற்றால்

தருக்கொழியும். பிறரிடமும் நட்பு ஓங்கும்.

மனது ஒருதூய நிலையை நாடிச் செல்லும்.

மற்றவரும் இதன்விளைவாய் நலம் காண்பார்கள்.

“எனது நான்” எனும் இரண்டு சொற்களுக்கும்,

ஏற்புடைய கருத்துணரும் தகைமை கிட்டும்.

உனது சொல், செயல் எண்ணக் குறைகள் போக்க

உயர்ந்த தற்சோதனையைப் பழகிக் கொள்க.” (ஞாக.பா.1613)

- அகத்தவத்தால் ஐம்புலனை வென்றிடலாம் அகத்தவத்தால் அறுகுண ஆளுமைப் பேறடைந்திடலாம்.
- உயிருக்குள்ளாகத் தெய்வமே அறிவாக, சிவமாக இருக்கிறது என்று விளக்கிக் காட்டுவதுதான் அகத்தவப் பயிற்சி.
- அகத்தாய்வு என்பது தூய்மையை நாடிச் செல்லும் தெய்வீகப் பயணம்.
- தானே தனது செயல்களைச் சோதனை செய்து விளைவைக் கணித்து திருத்தம் பெறும் வெற்றியே அகத்தாய்வு..
- எண்ணம் ஆராய்தல், ஆசை சீரமைத்தல், சினம் தவிர்த்தல், கவலை ஒழித்தல், ஆணவத்தை அழித்தல், அறுகுண

சீரமைப்பு பெறுதல், நான் யார்? என்ற பயிற்சிகள் மூலம் அகத்தை ஆய்வு செய்து கொள்ள முடியும்.

நம்மையும் நம்மைச் சுற்றியுள்ள புறத்தையும் உள்ளதை உள்ளவாறு உணர்வதற்கான பக்குவத்தை பெறுவதற்கான பயிற்சிதான் ‘தவம்’.

அறிய வேண்டியவைகளை முழுமையாக அறியப் பெற்று செய்யவேண்டிய செயல்களை நெறிபிறழாமல் செய்ய நம்மைத் தூண்டுவதே ‘தவம்’.


ஞானம் பெருகி அஞ்ஞானத்தின் அவலம் குறைகிறது. கானகம் சென்றுதான் ‘தவம்’ செய்யவேண்டுமா? வேண்டாம்!

இல்லறத்திலிருந்தே ‘தவம்’ செய்யலாம் தவத்தில்தான் ‘அமைதி’யான மனம் நமக்கு அமைகிறது.

அந்த அமைதியால்தான் இல்லறத்தின் ஒவ்வொரு செயலிலும் இனிமையைக் காண்கின்ற பக்குவத்தை பெறமுடியும்.

ஞானிகள்தான் ‘தவம்’ இயற்றவேண்டுமா? இல்லையில்லை! குடும்பத்தாருக்கே தவமும், அகத்தாய்வும் (தற்சோதனை) மிகவும் அவசியம்.

மன அமைதிக்கு அகத்தவமும், வினைத் தூய்மைக்கு அகத்தாய்வும் தேவை. அகத்தவம் மன ஆற்றலை பெருக்கும். அகத்தாய்வு மன ஆழுக்கை நீக்கும்.



இரண்டையும் பெற அன்பர்களே வாரீர்! ‘தத்துவம், விஞ்ஞானம், வாழ்க்கை நெறி இவை பற்றிய சிந்தனைத் தூண்டல் தான் மனவளக்கலை தவ மையங்கள், அறிவுத்திருக் கோயில்கள்.

வேதாத்திரியம் அகத்தவத்தையும் அகத்தாய்வினையும் பயிற்சியாக சொல்லித் தருகிறது. வாருங்கள் மனவளக்கலை மன்றங்களுக்கு.

# அறிவின் அகநோக்குப் பயணம் வேண்டும்

அறிவின் அகநோக்குப் பயணம் என்பது மனத் தூய்மையை நாடிச் செல்லும் ஒரு தெய்வீகப் பயணம்.

ஐயுணர்வின் வயப்பட்டு ஆன்மாவானது உணர்ச்சிப் பெருக்கில் பல செயல்களைப் புரிகிறது. விளைவறிந்து செயலாற்றும் பண்பு ஓங்கும் வரையில் ஆன்மாவின் செயல்களால் பெரும்பாலும் துன்பமே விளைகின்றது.

துன்பமோ பொருந்தா உணர்வு. அறிவு உயர்ந்து விழிப்பு நிலை பெறும் வரையில் ஆன்மா பழக்கத்தின் வழியேதான் செயல்களை ஆற்ற முடியும்.

எனவே துன்பங்கள் மேலும் மேலும் பெருகுகின்றன. இந்த நிலைமையிலிருந்து தன்னையே தான் மீட்டுக் கொள்ள நிச்சயமான ஒரு வழி "அறிவின் அகநோக்குப் பயணம்" தான்.

தன்னைப்பற்றி தன் இருப்பு இயக்க நிலைகளைப் பற்றி தன்னிடமிருந்து எழும் எண்ணங்களைப் பற்றி செயல்களைப் பற்றி சிந்தனை செய்து நலம் தீது உணர்ந்து தீமை களைந்து நல்லன பெருக்கிப் பயன் காணும் ஒரு உளப் பயிற்சியே தற்சோதனையாகும். இது மனிதன் அறிவை உயர்த்தி வாழ்வை வளப்படுத்தும் ஓர் நற்பயிற்சி.

அறிவின் அகநோக்குப் பயணம் செய்வது எப்படி என்று சில நண்பர்கட்கு வினா எழும். தன்னைப் பற்றி சிந்திப்பதுதானேஅசநோக்குப் பயணம்! சரி!நான் யார்? என்ற வினாவினை எழுப்பிக் கொள்ளுங்கள்.

நான் எவ்வாறு இருக்கிறேன். எனது தன்மைகள் என்ன நான் உடலா உயிரா அல்லது மனமா? அல்லது இவற்றிற்கும் மேலான ஏதோ ஒன்றா? என்று சிந்தனையை தொடங்குங்கள்.

இவ்வினாவிற்கு கண்ட விடை பற்றி அருள்தந்தை சில கட்டுரைகளில் எழுதியுள்ளார். அவற்றில் ஒன்றை நன்றாகப் படித்துக் கொள்ளுங்கள்.

மேலும் சிந்தியுங்கள். உடலோ அணுக்கள் பல இணைந்த கொத்தியக்கக் காட்சி. உயிரும் பரமாணுக்களின் தொடரியக்கமே.

உயிர் உடலில் இயங்கும்போது அது உணர்ச்சி என்ற சிறப்பாற்றல் பெற்று பலவேறு அனுபவங்களாகி மன ஆற்றலாக விளங்குகிறது.

மொத்தத்தில் உடலும் உயிரும் இணைந்து திணிவு பெற்ற நிலை. உயிரோ நுண்மை நிலையிலேயே உடலுக்குள் சுழன்றோடிக் கொண்டிருக்கும் ஆற்றல்.

இப்போது என்ன விளங்குகிறது? ஆற்றலும் (Energy) ஆற்றலின் திணிவு நிலையும் (Association of energy) தான் உயிரும் உடலுமாக இயங்குகின்றன என்ற உண்மை விளங்குகிறது.

இவ்வறிவின் ஒளியிலேயே பேரியக்க மண்டலம் (Universe) முழுமையும் மனக்கண்முன் கொண்டு வந்து சிந்தியுங்கள். ஆற்றலும் ஆற்றலின் திணிவாலாகிய தோற்றங்களும் (Masses) தான் பேரியக்க மண்டலம் என விளங்கும்.

மானுடத்திற்கு எந்த நெறியைப் போதிப்பது என்று கலங்குகிறார் வேதனைப்படுகிறார் இந்தப் பாடலில் தாயுமானவர்.

வான் ஆதி பூதமாய் அகிலாண்ட கோடியாய்,

மலை ஆகி வளை கடலுமாய்,

மதி ஆகி, இரவியாய், மற்றுள எலாம் ஆகி
வான் கருணை வெள்ளம் ஆகி,

நான் ஆகி நின்றவனும் நீயாகி நின்றிடவும்
நான் என்பது அற்றிடாதே
நான் நான் எனக்குளறி, நானா விகாரியாய்,
நான் அறிந் து அறியாமையாய்ப்

போனால் அதிர்ஷ்டவலி. வெல்ல எளிதோ? பகல்
பொழுது புகும் முன்கண்மூடிப்
பொய்த்துகில் கொள்வான் தனை எழுப்ப வசமோ? இனிப்
போதிப்ப து எந்த நெறியை?

ஆனாலும் என்கொடுமை அநியாயம் அநியாயம்
ஆர்பால் எடுத்து மொழிவேன்?
அண்டபகிரண்டமும் அடங்கஒரு நிறைவுஆகி
ஆனந்த மானபரமே. (தா.பா.73)

- ஆகாயம் முதலிய ஐம்பூதங்களாகவும்,
- கோடிக்கணக்கான அண்டங்களாகவும், மலையாகவும்,
- பூமியைச் சூழ்ந்து நிற்கும் கடலாகவும், சந்திரனாகவும், சூரியனாகவும்,
- மற்றுமுள்ள எல்லாப் பொருள்கள் ஆகவும்,
- உயர்ந்த அருள் வெள்ளமாகி, நான் ஆக நின்றவனும் நீயே ஆக இருந்தும்.

- நான் என்னும் உடல்பற்றைக் கைவிடாது “நான்நான்” என்று தன்முனைப்பு காட்டிக் குளறி,
- பல மாறுபாடு உடையவனாகி, அறிந்தும், அறியாமை உள்ளவன்போல மனம் போன போக்கில் போனால்,
- அந்த வாய்ப்பை இழந்தது ஆகாதோ?
- அதனை மீண்டும் பெற முடியுமோ?
- பகல் நேரம் முடியும் முன்பே கண்மூடிப் பொய்யாய்த் தூங்குபவனை, எழுப்ப இயலுமோ?
- இனி இவனுக்கு எந்த நெறியைப் போதிப்பது?
- ஆனாலும் எனக்கு ஏற்பட்டிருக்கும் கொடுமை மிகவும் அநியாயம். இதுகுறித்த யாரிடத்தில் எடுத்துக் கூறுவேன்?

நான் என்னும் உடல்பற்றைக் கைவிடாது “நான்நான்” என்று தன்முனைப்பு காட்டிக் குளறி, அறிந்தும், அறியாமை உள்ளவன் போல மனம் போன போக்கில் போய்க் கொண்டிருக்கும் மானுடத்திற்கு எந்த நெறியை போதிப்பது என்று கவலைப்படுகிறார் தாயுமானவர்.

தாயுமானவரின் குழப்பத்திற்கு விடையாக வருகிறது வேதாத்திரியம். குழம்பி போயிருக்கும் மானுடம் “அகநோக்குப் பயணத்தில்” செல்ல வேண்டும் என்று மகரஷி வழிகாட்டுகிறார்.

.”ஆன்மீகத் துறையென்ற அகலவழிப் பாதையிலே

அடிவைத்து மென்மேலும் முன்னேறிப் போகுங்கால்

அறிவுபெறும் அனுபவங்கள் வியப்பாகும். இனிமையாம்.

ஆன்மஒளி சுடர்விட்டு உள்ளுணர்வுப் பேறாகும்.

ஊன்உருவமான உடல் ஊர்தியென்னும் ஊடே,

உயிர் என்ற சூக்குமமே "நான்" என்ற உணர்வு வரும்.

ஒடுங்க ஒடுங்கக் காணும் உண்மையோ அறிவதுவே

உயிரிலிருந்து ஓங்கி எழுந்து உடல் உலகம் வெளி விரியும்."

(ஞாக.பா.1434 (1)

"நான்" அதுவே இருப்புநிலை மெய்ப்பொருள் தெய்வமெனும்,

நன்முடிவ விளக்கமாம். அந்தமுழு முதற்பொருளே

நல்ல ஒழுங்காற்றலாய், நல்லுணர்வாய், அறிவறியும்

நல் ஊற்றாய்த் திருவருளாய், நல்லின்ப வெள்ளமாய்,

தேன்பொழியும் பேரின்பம் திகட்டாது! சலிக்காது!

திருத்தங்கள் எண்ணம்போல் செயல்களிலே மலர்ந்துவரும்

செருக்கொழித்து தான்அடங்கித் தெய்வநிலை எங்கெதிலும்

திருவருளின் காட்சியாம், திரும்புங்கள் உட்புறமாய்." (ஞாக.பா.1434 (2))

அன்பு வழியும், அருள் வழியும், தெய்வீக வழியுமாகிய ஆன்மீகத் துறை என்ற அகன்ற பாதையில் பயணித்து அடிமேல் அடிவைத்து

முன்னேறிப் போகின்றபோது, வியப்பான அனுபவங்களை அறிவு அனுபவமாகப் பெறும்.

அந்த அனுபவங்கள் இனிமையாக இருக்கும். உடலிலிருந்தும் மனதிலிருந்தும் முற்றிலும் வேறதாகக் கருதப்படுகின்ற ஆன்ம ஒளியானது பிரகாசமாகி உள்ளுணர்வு கிட்டும் பேறு அமையப்பெறும்.

தசையால் உருவாக்கபட்டுள்ள உடல் என்னும் வாகனத்திற்குள்ளே, அந்த உடலை சூக்குமமாக இயக்குகின்ற உயிர்தான் “நான்” என்ற உணர்வு உண்டாகும்.

அந்த நான் என்ற உணர்வு குறையக் குறைய அறிவு என்ற இருப்பு நிலையை உணரலாம் அந்த அறிவானது இயக்கத்தில் உயிராகவும் எழுச்சி பெற்று உடலாகவும் உலகமாகவும், வெளியாகவும் விரிவடையும்.

மனித அறிவின் அகநோக்குப் பயணத்தில் உடலுக்குள் உயிர், உயிர்க்குள் அறிவு, அந்த அறிவே தெய்வமாகவும் உள்ளது என்ற உணர்வு கிட்டும்.

அறிவின் அகநோக்குப் பயணத்தில், உடலுக்குள் உயிர், உயிர்க்குள் அறிவு, அந்த அறிவே “நான்” ஆகவும் உள்ளது.

அதுவே இருப்பு நிலையாகிய மெய்ப்பொருள் என்றும், தெய்வம் என்று சொல்லப்படுகிறது என்பது முடிவில் விளக்கமாகும்.

அந்த மெய்பொருளாகிய முழுமுதற்பொருளே இயல்பூக்கத்தினால் ஒழுங்காற்றலாகவும், தெய்வீகமாகிய நல்லுணர்வாகவும், அறிவை அறிவதற்கான நல்ல ஊற்றாகவும், தெய்வீக அருளாகவும், நல்ல இன்ப வெள்ளமாகவும் உணரப்படும்.

அந்த உணர்வானது தேன் பொழியும்போது ஏற்படுகின்ற இன்பம் போலிருக்கும். ஆனால் திகட்டாது. சலிக்காது. நீடித்த, நிலைத்த, சலிப்பில்லாத பேரின்ப நிலையாக இருக்கும்.

அந்நிலையானது அனுபவமாகி விடுவதால், எண்ணம், சொல், செயல்களில் திருத்தங்கள் ஏற்படும்.

அந்தத் திருத்தங்களால் தன்முனைப்பு என்னும் செருக்கானது ஒழிந்துவிடும். எங்கும் எதிலும் தெய்வீக காட்சியாகவே உணரப்படும்.

ஆகவே மனதை உட்புறமாகத் திருப்பி, அறிவின் அகநோக்குப் பயணத்தில் பேரின்ப நிலையை அகத்துணர்வாக அனுபவித்து ஆனந்தமாக வாழ்வீர்களாக!

# வினைத்தூய்மை அனைவர்க்கும் இன்பம் நல்கும்.

தனது வினைப்பதிவுகளே கெட்டகுணங்களாக தீய எண்ணங்களாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்று வேதனைப்படுகிறார் தாயுமானவர்.

மனித உயிரைத் தொடர்ந்து பல தலைமுறைகளுக்கும் வரக்கூடிய சொத்து வினைப்பதிவுகள் மாத்திரமே தான்.

இது வரையில் பல பிறவித் தொடராகச் சேர்ந்தும், இப்பிறவியிலும் கூட்டப்பட்டதும் ஆகிய நமது வினைப்பதிவுகள் அனைத்தும் உடலில் நோயாகவும் மனதில் களங்கங்களாகவும் உள்ளன.

எனவே, எழும் எண்ணங்கள் அனைத்தும் நாம் சேர்த்து வைத்த நமது சொத்துக்களே. அவை எங்கு போகும்?

நாம் வேறு வகையில் மனதை, உடலை, வாழ்வில் பழக்கி, புதிய பதிவுகளை ஏற்படுத்தி பழைய பதிவுகளின் வேகத்தைக் குறைக்க வேண்டும்.

தவம் செய்து உயிரின் அசைவையே கவனிப்பது ஒரு புதிய திருப்பம். சிறிது காலம் பயின்ற பின் தான் மனம் நாம் விரும்பும்வாறு ஒரே எண்ணத்தில் நிலைபெறும்

அதுவரையில் விடா முயற்சியோடு பழகி பழைய பதிவுகளுக்கு மேல் பதிவுகளைக் கொடுக்க வேண்டும்.

நாம் சமையலறையில் அலமாரியில் சமையலுக்கேற்ற ஐம்பது பொருட்களை அடுக்கி வைத்திருக்கிறோம் என்று உதாரணத்துக்காக வைத்துக் கொள்ளுங்கள்.

மிளகு வேண்டுமென்று எடுக்கப் பார்க்கிறோம். அந்த வேலையில் கடுகு, பூண்டு, சீரகம் இன்னும் மற்ற சாமான்களும் கண்களுக்குத் தென்படுகின்றன.

நான் மிளகு தானே தேடுகிறேன். இவையெல்லாம் ஏன் தென்பட வேண்டும் என்று சலித்துக் கொள்ள முடியுமா?

எல்லாமே நாம் வைத்தவைதாம். தேவையான போது அவையும் உதவும். இப்போது மிளகை மாத்திரம் தேடி எடுத்துக் கொள்வோம் என்று மிளகை எடுத்துக் கொள்வது தான் சரியான வழி.

இதே போன்றே நமது சொத்துக்களாம் வினைப்பதிவுகள் அனைத்தும் எண்ண அலைகளாக எழுச்சி பெற்றுக் கொண்டே தான் இருக்கும்.

வேண்டும் போது அவையும் பயன்படும். இப்போது குண்டலினி சக்தியின் மீது மனம் வைத்து தவம் செய்வோம் என்று விழிப்பு நிலைக்கு மனத்தைக் கொண்டுவந்து தவத்தை தொடர்ந்து ஆற்றவேண்டியது தான்.”

பொய்யினேன்,  புலையினேன், கொலையினேன், நின்னருள்

புலப்பட அறிந்து நிலையாப்

புன்மையேன், கல்லாத தன்மையேன்,  நன்மைபோல்

பொருள் அலாப் பொருளை நாடும்

வெய்யனேன், வெகுளியேன், வெறியனேன், சிறியனேன்,

வினையினேன் என்றறு என்னை நீ

விட்டுவிட நினைவையேல் தட்டு அழிவது அல்லாது

வேறுகதி ஏதுபுகலாய்

துய்யனே மெய்யனே உயிரினுக்கு உயிரான

துணைவனே இணை ஒன்று இலாத்

துரியனே துரியமும் காணா அதீதனே

சுருதிமுடி மீதிருந்த

ஐயனே அப்பனே எனும்அறிஞர் அறிவைவிட்டு

அகலாத கருணை வடிவே

அண்டபகி ரண்டமும் அடங்கஒரு நிறைவாகி

ஆனந்த மானபரமே" (தா.பா.74).

- நான் பொய்யான உடலை மெய் என்று நினைக்கும் பொய்யன்.
- புலால் தொழில் செய்பவன்.
- கொலைத் தொழில் உடையவன்.

- நினது திருவருள் வெளிப்படவும் அதனை அறியாத உறுதிப்பாடு இல்லாத அற்பன்.
- கல்வி கல்லாத தன்மை உடையவன்.
- நன்மை செய்வதுபோல காட்டித் தீமை செய்யும் பொய்யான பொருள்களை விரும்பும் கொடியவன்.
- சினம் மிகுதியும் உடையவன்.
- வெறித்தனம் உடையவன்.
- கீழானவன்.
- இருப்பினும் என்னை வினைகளால் கட்டப்பட்டவன் என்று கருதி கைவிடுவாயேல் – தடுமாறி அழிந்து படுவதைத் தவிர வேற வழி யாது உளது? சொல்லுவாயாக!

வினைகளால் கட்டப்பட்டவன் குணக்கேடுகள் நிறைந்தவனாக இருப்பான். அவன் தன் குணக்கேடுகளை களைய வினைத்தூய்மை செய்ய வேண்டும்.

வினைத்தூய்மை செய்ய வழி காட்டுகிறது வேதாத்திரியம்.

“வினைஎதுவும் நலம்தீது என்பது இல்லை.

விளையும் அதனை ஆற்றுபவர் நோக்கம் கொண்டே

வினையதனை நலம்தீது எனப் பிரிப்போம்.

விழிப்புடனே எண்ணம் எழும்போதே தேர்வோம்.

வினை, காலம், இடம்,தொடர்புப் பொருளுக்கும் ஏற்ப

வெவ்வெறு அளவு இன்ப துன்பம் நல்கும்.

வினைகள்தமை உடல்தகுதி, உலகம் ஒப்ப,

உயர் இயற்கை நியதிஒக்க ஆற்றமேலாம்." (ஞாக.பா.1285)

வினை என்பது கர்மா அல்லது செயல் ஆகும். செயல்களில் நன்மையானது தீமையானது என்பது எல்லாம் இல்லை.

செயலின் மூலமாக ஏற்படும் விளைவு, செயலாற்றுபவரின் நோக்கம் ஆகியவற்றைக் கொண்டே, நன்மையானது அல்லது தீமையானது என்று பிரித்துக் கூறுகிறோம்.

எண்ணம்தான் செயலாக மலர்ச்சி பெறுகிறது. செயலுக்கு முன் நிலையாகிய எண்ணம் எழும்போதே விளைவைத் தெரிந்து விழிப்புடன் செயல்படுவோம்.

செயல், செயலுக்குரிய காலம், செயலுக்குரிய இடம், செயலால் தொடர்பு கொள்ளும் பொருள் ஆகியவற்றிற்கு ஏற்றபடி வெவ்வெறு அளவுகளில் இன்பம் துன்பம் வெளிப்படும்.

உடல் ஆற்றலின் தகுதியோடு. உலக மக்கள் ஏற்றுக் கொள்ளத் தக்க வகையில், இயற்கை நியதிக்கு உட்பட்டு செயல்களைச் செய்தால் அச்செயல்களைச் செய்தால் அச்செயல்கள் எல்லாம் உயர்வானவையாகும்.

"வினைத்தூய்மை பெறவேண்டின், மனத்தின் தூய்மை

வேண்டுவது இன்றியமையாததாகும்.

வினைத் தூய்மை ஒழுக்கமுடன், கடமை, ஈகை

விளங்கும் அறநெறி நிற்க விரைந்து ஓங்கும்.

வினைத் தூய்மை வித்தான மனதின் தூய்மை

விண் உணரும் அகத்தவத்தால் ஓங்கும் உய்ய,

வினைத் தூய்மை மனத் தூய்மை ஒன்றை ஒன்று

உயர்த்தி மனிதன் தெய்வமறியச் செய்யும்." (ஞாக.பா.1286)

வினை என்பது செயல் ஆகும். தூய்மையான உயர்வான, தீங்கு வராத குற்றமற்ற நன்மை தரத்தக்க செயல்களைச் செய்ய வேண்டுமானால், அதற்கு முதலில் செய்ய வேண்டியது மனத் தூய்மையாகும்.

மனம் தூய்மை பெறாமல் வினைகள் தூய்மை பெற முடியாது. மனம் என்பது ஒரு பொருள் அல்ல. அனுபோக அனுபவங்களாக உள்ள எண்ணங்களே ஆகும்.

எண்ணம் தான் செயலாக மலர்கிறது. அறநெறிகளான ஒழுக்கம், கடமை, ஈகை மூன்றையும் கடைப்பிடித்தால் வினைத்தூய்மை கிட்டும்.

வினைத் தூய்மைக்கு விண் என்னும் உயிரை உணர்கின்ற அகத்தவத்தின் மூலமாக உள்ள மனதின் தூய்மைக்கு, உதவியாகிறது. இரண்டுமே ஒன்றை ஒன்று உயர்வடையச் செய்து மனிதனை தெய்வ நிலையை அறியச் செய்யும்.

."வினைத்தூய்மை அனைவர்க்கும் இன்பம் நல்கும்

விரிந்த மனத்தூய்மை மெய்ஞானம் ஈட்டும்

வினைத் தூய்மை மனத்தூய்மை உயிர்களூடே

உயர் அன்பு தொண்டு ஈகை உண்டு பண்ணும்.

வினத் தூய்மை மனத் தூய்மை பெறுதற்கென்றே

வேதம் மதம் உயர்நூல்கள் விரிந்ததாகும்

வினைத்தூய்மை மனத்தூய்மை வெறுப்பு ஒழித்து

விழிப்பு நிலை அன்பு இரக்கம் இயல்பாய் ஆக்கும்." (ஞாக.பா.1286)

மனிதர்கள் நலம், தீது என்று பிரித்துணர்ந்து செயலாற்றும் ஆறாவது அறிவு இருந்தும், குறையறிவின் காரணமாக பழக்கத்தின் வழியே பல பிறவிகளில் வாழ்ந்து வந்த நிலையால், துன்ப வாழ்வையே அனுபவிக்கிறார்கள்.

ஆகவே திருத்தம் கொடுக்க வேண்டியது அவசியமாகிறது. பழக்கங்கள் விளக்க வழியில் செயலாற்றினால் எல்லோருக்குமே இன்பம் உண்டாகும்.

செயலுக்கு மூலமான மனதைத் தூய்மை செய்வதால் மனவிரிவு ஏற்பட்டு மெய்யுணர்வை மலர்த்தும்.

மனத் தூய்மையும் வினைத் தூய்மையும் உடன் வாழும் உயிர்களுக்கிடையில் உயர்வான அன்பை வெளிப்படுத்தி, தொண்டு மனப்பான்மையையும், பிற உயிர்க்கு உதவும் ஈகை குணமும் உருவாகும்.

மனித குலத்திற்கு மனத்தூய்மையும் வினைத் தூய்மையும் அவசியமான தாகையால், அவற்றை மக்கள் கடைபிடித்து வாழ்வதற்கென்றே வந்தவைகள் தான் வேதம், மதம், உயர் நூல்கள் ஆகும்.

வினைத் தூய்மையும் மனத் தூய்மையும் சினத்தின் மற்றொரு வகையான வெறுப்புணர்வை ஒழித்து விடும். விளைவறிந்த விழிப்பு நிலையானது அன்பையும், இரக்கத்தையும் இயல்பானதாக ஆக்கி விடும். விளைவறிந்த விழிப்பு நிலையிலேயே ஆனந்தமாக வாழ்வோமாக!

# குணக்கேடர் அவனிமிசை உண்டோ சொலாய்?

எத்துணை வகையான நூல்களை நான் கற்றாலும் கேட்டாலும் என் மனம் அடங்குவதில்லை. அதனால் குணக்கேடுடையவனாக இருக்கிறேனே என்று வருந்துகிறார் இப்பாடலில் தாயுமானவர்.

மனதை அடக்க நினைத்தால் அலையும். மனத்தை அறிய நினைத்தால் அடங்கும். மனமதை அடக்கிவிட்டால் மட்டில்லா இன்பம். மனமதை தாழ்த்திவிட்டால் மயக்கத்தால் துன்பம்

எத்தனை விதங்கள்தான் கற்கினும் கேட்கினும் என்

இதயமும் ஒடுங்கவில்லை.

யானெனும் அகந்தைதான் எள்ளளவும் மாறவில்லை.

யாதினும் அபிமானம்என்

சித்தமிசை குடிகொண்டது, தீகையொடு இரக்கம்என்

ஜென்மத்தும் நான் அறிகிலேன்.

சீலமொடு தவவிரதம் ஒரு கனவில் ஆயினும்

தரிசனம் கண்டும்அறியேன்.

பொய்த்தமொழி அல்லால் மருந்துக்கும் மெய்ம்மொழி

புகன்றிடேன். பிறர்கேட்கவே

போதிப்பது அல்லாது சும்மா இருந்து அருள்

பொருந்திடாப் பேதைநானே.

அத்தனை குணக்கேடர் கண்டதாகக் கேட்டதா

அவனிமிசை உண்டோ சொலாய்?

அண்டபகி ரண்டமும் அடங்க ஒரு நிறைவாகி

ஆனந்த மானபரமே. (தா.பா.75)

- எத்துணை வகையான நூல்களை நான் கற்றாலும் கேட்டாலும் என் மனம் அடங்குவதில்லை.
- நான்" என்னும் அகங்காரம் ஓர் எள்ளளவும் கூட குறையவில்லை.
- ஈகை, இரக்கம் என்ற இந்த இரண்டும் இப்பிறப்பில் என் எண்ணத்தில் குடிகொண்டதாக இதுவரை நான் அறியவில்லை.
- ஒழுக்கம், நோன்பு, தவம் என்பனவற்றை ஒருமுறையேனும் கனவில்கூட கண்டதில்லை.
- பொய்யான சொற்களைப் பேசுவேனே தவிர மருந்ததுக்குக்கூட உண்மையான சொற்களைப் பேசி அறியேன்.
- பிறர் கேட்குமாறு உபதேசம் செய்வேனே தவிர, சும்மா இருந்து, அதனால் திருவருளைப் பொருந்தி அறியாத அறிவிலிதான் நான்.

இத்தனை ஒழுக்கங்கெட்ட மனிதனை இந்த உலகத்தில் நீ கண்டதோ, கேட்டதோ உண்டோ? கூறுவாயாக!

எத்துணை வகையான நூல்களை நான் கற்றாலும் கேட்டாலும் என் மனம் அடங்குவதில்லை. அதனால் குணக்கேடுடையவனாக இருக்கிறேனே என்று வருந்துகிறார் இப்பாடலில் தாயுமானவர். ஆனால் தாயுமானவரே இதற்கு விடையாக ஆனந்தக்களிப்பில் பாடுகிறார்.

"சிந்தைப் பிறந்ததும் ஆங்கே-அந்தச்
  சிந்தை இறந்து தெளிந்ததும் ஆங்கே
எந்த நிலைகளும் ஆங்கே-கண்ட
  யான்தான் இரண்டுஅற்று இருந்ததும் ஆங்கே" (தா.பா.1442)

ஓர் எண்ணம் பிறந்ததும் ஆங்கே. அந்த எண்ணம் இறந்துபட்டு, தெளிவு பிறந்ததும் ஆங்கே. எந்த ஒரு நிலையும் ஆங்கே. கண்ட நான், தான் என்று இரண்டற்று இருந்ததும் ஆங்கேதான்.

மனம் எங்கிருந்து தோன்றியதோ அங்கு ஒடுங்கியது. சிந்தை தெளிந்ததும் மனம்தான். சாட்சியில்தான் சிந்தை தெளியும். எல்லா நிலைகளும் அங்குதான் தோன்றி ஒடுங்குகிறது.

இதையெல்லாம் உணர்ந்த நான் இரண்டற்றவனாக, அதாவது அத்வைதியாக இருப்பதும் அவ்விடத்தில்தான்.

"சிந்தைப் பிறந்ததும் ஆங்கே-அந்தச்
  சிந்தை இறந்து தெளிந்ததும் ஆங்கே"

சூரியனை முதன்மையாகக் கொண்டு தோன்றிய மேகமானது சிறிது நேரத்திற்கு சூரியனையே மறைத்து விடுகிறது.

சூரியனுடைய வெப்பத்தால் கடல் நீர் ஆவியாக மேகமாக மாறுகிறது. பின் அம்மேகம் தன்னிடத்திலுள்ள நீரை மழையாகப் பொழிந்துவிட்டு மறைகிறது.

மழை நீரானது அருவியாகவோ, ஓடையாகவோ ஆறாகவோ ஓடி இறுதியில் கடலில் கலக்கிறது. கடலிலிருந்து வந்த நீர் மீண்டும் கடலையே சென்றடைகிறது.

மேகம் போன்று இறைவனிடதிலிருந்து தோன்றிய மனம் இறைவனையே மறைக்கின்றது.

நல்வினை தீவினையாகிய செயலைப் புரிந்து கடைசியில் மனம் ஆத்ம சொரூபத்தில் நசித்துப் போகிறது.

"எந்த நிலைகளும் ஆங்கே-கண்ட
யான்தான் இரண்டுஅற்று இருந்ததும் ஆங்கே"

மனம் இறைவனிடதிலிருந்து ஜீவனை பிரித்து வைத்துள்ளது.

மனம் உள்ளவரையில் ஜீவன் தன்னைப் பரமாத்மாவுக்கு அன்னியமாக எண்ணிச் செயல் புரிந்து வருகின்றான்.

தான்வேறு பரமாத்மா வேறு என்ற நிலையை மனம் நம்மிடத்து ஏற்படுத்தி இருக்கின்றது.

மனம் தெளிவடைகின்ற பொழுது ஜீவாத்மன் தன்னைப் பராமாத்மாவுக்கு வேறானவன் என்ற உணர்வையும் கடந்து தானும் பரமாத்மாகவும் ஒன்றே என்பதை உணர்கின்றான்.

மனமே எல்லாமாக இருக்கிறது என்பதை உணர்ந்து கொண்டால் குணக்கேடுகள் இன்றி இறைநிலையோடு இணைந்து ஆனந்தமாக வாழலாம். மனதின் பல நிலைகள் பற்றி வேதாத்திரியம் விளக்கமாக பாடுகிறது.

“ஐம்புலனால் உலகதனைத் தொடரும் போது உன்

அறிவு நிலை “புத்தி”. புற மனமும் ஈதே.

ஐம்புலனைக் கடந்து. முன் உணர்ந்த வற்றை

அறிய அது “சித்தம்”. நடு மனம் ஈதாகும்.

ஐம்புலனை அறிந்தவற்றைக் கடந்து, நுண்

அணுவானால் “அகங்காரம்”. அடிமனம் காண்.

ஐம்புலனை அறிந்தவற்றை, அணுவைத் தாண்டி

ஆதிவெளி நீயானால், அறிவே தெய்வம்.” (ஞாக.பா.1177)

மனம் அணுவைத் தாண்டினால்– ஆதிவெளியாக நாம் ஆனால், ஆனந்தமான நிலைதான். ஆனந்தம்! ஆனந்தம்!! ஆனந்தமே!! வாழத் தெரிந்திடில் ஆனந்தமே!!!

# குருவின் சேர்க்கை

ஆணவம், கன்மம், மாயை – இந்த மூன்றைச் சேர்த்துக் கட்டிய மூட்டைதான் மனிதன் என்ற பிரகிருதி.

மனிதன் படுகின்ற துன்பங்கள் அத்தனைக்கும் உற்பத்தி ஸ்தானம் இம்மூன்றே. இவற்றை அப்படியே எடுத்து அகற்றிவிட முடியாது.

ஆணவத்தைப் போக்க வேண்டுமானால் உண்மையை, அதாவது மெய்ப்பொருளை அடைய வேண்டும்.

கன்மத்தைப் போக்க வேண்டும் என்றால் நல்ல செய்கைகளைச் செய்து செய்து அவற்றை மேல் பதிவாகக் கொண்டு, ஏற்கனவே செய்துள்ள தீய செயல்களின் பதிவுகள் செயலுக்கு வராமல் தடுக்க வேண்டும்.

இவ்வாறு வினைத் தூய்மை பெற்று, பரம்பொருள் உணர்வும் வந்துவிடுமானால், தெளிந்த விழிப்பு நிலை கைகூடும்.

அவ்விடத்திலே மயக்கம் (மாயை) விலகி விடும். இதுதான் மனிதனாகப் பிறந்தவன் செய்ய வேண்டியதும் அடைய வேண்டியதும். இதற்குத்தான் குருவினுடைய உதவி வேண்டும்.

ஆத்மதாகம் கொண்ட மனிதன் இந்த நினைப்பிலே உருகி நிற்கும்போது, அந்த நினைப்பானது குருவை அவன் முன் கொண்டு வரும். குரு வருவதற்கு வேறு மார்க்கமேதும் கிடையாது.

ஓர் ஏற்புத் தன்மை இருந்தால் குருதானே இங்கே வருவார். எனவே. குருவைத்தேடி அலைய வேண்டியதில்லை.


தன்னை அறிந்து கொள்ள வேண்டும், என்ற ஆர்வம் உயரட்டும். தானாகவே அவனுடைய எண்ணம் உயர் நிலையில் பக்குவப்பட்டும், குரு தானாக வருவார்.

மனிதனுடைய எண்ணம் என்பது என்ன? அது பிரம்மத்தினுடைய சாயைதானே? பிரம்மத்தினுடைய இயக்கம் தானே எண்ணமாக. அறிவாக இருக்கிறது?

உயர்ந்த நிலையில் அறிவாகவும், மயக்க நிலையில் மனமாகவும் அதுவே குறிப்பிடப்படுகிறது.

அது தானாக அமர்ந்த நிலையில் பிரம்மமாக உள்ளது. பக்குவப்பட்டவன் நினைத்தால் குருவர வேண்டியது தானே? (Fraction demands and Totality supplies).

அவ்வாறு குரு வர வேண்டியதைத் தடுப்பது எது? ஏற்கெனவே எண்ணியிருந்த எண்ணங்களால் உருவான ஒரு மேடு மத்தியிலே தடுக்கிறது.




இதைக் கணித்து உணர்ந்து கொண்டு நல்லதிலேயே மனதை நிலைக்கச் செய்யப் பழகிக் கொள்ள வேண்டும்.

தாயுமானவர் பக்குவப்பட்டு இருந்தார். மௌனகுரு அவரைத் தேடி வந்தார்.

“எக்காலமும் தனக்கு என்னஒரு செயல்இலா
ஏழைநீ என்றிருந்திட்டு,
எனது ஆவி உடல்பொருளும் மௌனியாய் வந்துகை
ஏற்று, நமது என்றஅன்றே,

பொய்க்கால தேசமும் பொய்ப்பொருளில் வாஞ்சையும்

பொய் உடலை மெய் என்னலும்
பொய்உறவு பற்றலும் பொய்யாகும் நான் என்னல்

பொய்யினும் பொய் ஆகையால்

மைக்கால் இருட்டு அனைய இருளில்லை, இருவினைகள்
வந்தேற வழியும் இல்லை
மனம் இல்லை, அம்மனத்து இனமில்லை, வேறும் ஒரு
வரவு இல்லை போக்கும் இல்லை,

அக்காலம் இக்காலம் என்பதிலை எல்லாம்
அதீதமயம் ஆனதன்றோ?
அண்டபகி ரண்டமும் அடங்ஒரு நிறைவாகி
ஆனந்த மானபரமே." (தா.பா.76)

எக்காலத்திலும் தனக்கு என்று ஒரு செயல் இல்லாது, அறிவிலியாக இருந்த எனது ஆவி, உடல், பொருள் ஆகிய மூன்றையும் மௌனகுருவாய் வந்து. கைப்பற்றி, "இனி இவை நம்முடையவை" என்று கூறிய அப்பொழுதே,

பொய்யான பொழுதும், பொய்யான இடமும், பொய்யான உலகத்துப் பொருள்கள்மீது விருப்பமும், பொய்யான உடலை நிலையானது என்று கூறுதலும், பொய்யான உறவுகளைப் பற்றி நிற்பதும், பொய்யே ஆகும்.

உடம்பை நான் என்று கூறுவது பொய்யினும் பொய். ஆகையால், நினைப்புகள் அகன்றன.

- அதனால் மழைக்கால இருட்டு போன்ற ஆணவமலம் இனி இல்லை.
- நல்வினை தீவினைகள் வந்து சேர வழியும் இல்லை.

- மனம் இல்லை.
- மனத்தது இனமாகிய புத்தி, அகங்காரம், சித்தம் ஆகிய இவையும் இல்லை.
- இறந்த காலம், நிகழ்காலம் என்னும் பாகுபாடு இல்லை.
- எல்லாமும் கடந்த ஒரு பெருவெளியாய் இருந்தது அல்லவோ?"

குருவின் சேர்க்கை மனிதனை நல்வழிப்படுத்தும் என்கிறது வேதாத்திரியம்.

"எப்பொருளை எச்செயலை எக் குணத்தை

எவ்வுயிரை ஒருவர் அடிக்கடி நினைத்தால்

அப்பொருளின் தன்மையாய் நினைப்போர் ஆற்றல்

அறிவினிலும் உடலினிலும் மாற்றங் காணும்,

இப்பெருமை இயல்பூக்க நியதி ஆகும்.

எவரொருவர் குருவை மதித்து ஒழுகினாலும்

தப்பாது குருவுயர்வு மதிப்போர் தம்மைத்

தரத்தில் உயர்த்திப் பிறவிப்பயனை நல்கும்." "(ஞாக.பா.10)

மனம் என்பது அனுபோக அனுபவங்களுடன் கூடிய ஜீவகாந்த அலையாகும். ஜீவகாந்தம் பஞ்சபூதக் கூட்டலாகிய உடலில் திணிவு பெறும்போது அழுத்தம், ஒலி, ஒளி, சுவை, மணம் என்று மாற்றம் பெற்று அததற்குரிய உணர் கருவிகள் மூலம், வெளியில் தொடர்பு கொள்ளும்போது ஏற்படும் உரசல்,

இறுக்க ஆற்றல் ஆகிய அழுத்தங்களால் அந்தந்தப் புலன் மூலம், முளைக்குச் சென்று கரைந்து ஜீவகாந்த களத்தின் மூலம் கருமையத்தை அடைந்து அலைவடிவில் சுருங்கி அறிவு என்னும் சுத்தவெளியின் தரமாகிறது.

மீண்டும் மீண்டும் எப்போது வேண்டுமானாலும் மூளை செல்களின் மூலம் பிரதிபலிக்கும்போது எண்ணம் என்கிறோம்.

எண்ணங்களின் தொகுப்பு மனம் ஆகும். கண்ணால் ஒரு பசுவைப் பார்க்கிறோமென்றால், பசுவினால் தடுக்கப்பட்ட ஒளி அலை கிளம்பிய இடமாகிய கண்களுக்கே வந்த சேர்ந்து சுருங்கி கருமையம் வரை இருப்பாகி விடுகிறது.

முளை செல்களில் விரித்துக் காட்டும்போது பசு உருவம் நமக்குள் தெரிகிறது. அதுதான் நினைவுப் பசு. பசு வேறு நாம வேறா என்றால் இல்லை. நாமேதான் பசுவாக இருக்கிறோம்.

மனம்தான் மனிதன். மனிதன்தான் மனம். அதுபோல ஒரு பொருளையோ, செயலையோ, குணத்தையோ, உயிரையோ அடிக்கடி நினைந்தால் அதன் தன்மையாகவே மாறி விடுவர். அதுவே இறைநிலையின் இயல்பூக்க நியதியாகும்.

வெள்ளைத் துணியைத் துவைத்து நீலம் கலந்த தண்ணீரில் முக்கி காயவைத்துக் கொண்டேயிருந்தால், பல நாட்கள் இதுபோலச் செய்வதால் வெள்ளைத்துணி நீலத்துணியாக மாறிவிடுவது போல மனமும் எதை நினைக்கிறதோ அதுவாக மாறிவிடுகிறது.

யார் ஒருவர் குருவின் பெருமைகளை மதித்துக் கடைப்பிடித்து குருவுடன் சேர்ந்து குரு வழியில் வாழ்கிறார்களோ, அவர்கள் குருவின் நிலைக்கு (தன்மை) தரம் உயர்ந்து பிறவிப் பயனை அடைவார்கள்.

இந்த அரும்பிறவியில் முன் வினையறுத்து எல்லையில்லா மெய்ப்பொருளை அடைவதற்கு வந்த ஒரு உதவி குரு உயிரின் சேர்க்கை வணங்கி குரு திருவடியை வாழ்த்தி வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# துணைநின்ற நூல்கள்


1. ஞானக்களஞ்சியம், வேதாத்திரி மகரிஷி, வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு
2. தாயுமானவர் பாடல்கள், புலவர் வீ.சிவஞானம், விஜயா பதிப்பகம், கோவை.
3. தாயுமானவர் நூல்கள், சுவாமி சித்பவானந்தர், திருப்பராய்த்துறை.
4. இணையதள தகவல்கள்.
5. ஞானக்களஞ்சிய கவிகள், இரா. மாரியம்மாள் மோகன்தாஸ், வேதலோக அன்பு நிலையம், பொள்ளாச்சி
6. தாயுமானவரின் ஆனந்தக்களிப்பு, மன்னார்குடி பானுகுமார். அழகுப் பதிப்பகம், சென்னை.
7. தாயுமானவரும் வேதாத்திரி மகரிஷியும், மன்னார்குடி பானுகுமார். விஜயா பதிப்பகம், கோவை.
8. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000, மன்னார்குடி பானுகுமார். விஜயா பதிப்பகம், கோவை.